2023 ஜூலை – செப்டெம்பர்

# அயலவர்



இனிய நவராத்திரி நல்வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவையுள்ளோர்க்கு தலைக்கோர் நிழல்

**இராணுவத்தின் தொழிநுட்பம் மற்றும் மனிதவள ஒத்துழைப்புடனும் பூரண ஒருங்கிணைப்புடனும் குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்காக புதிய வீடுகளை நிர்மாணித்து வழங்கும் 'தலைக்கோர் நிழல்' திட்டத்தின் கீழ் இதுவரை இராணுவத்தினால் நன்கொடையாளர்களின் நிதி அனுசரணையில் பலநூறு வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு அவசியமுள்ள மக்களுக்காக வழங்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம், வன்னி, கிழக்கு மற்றும் முல்லைத்தீவு எனும் பாதுகாப்புப் படை தலைமையகங்களின் கீழ் செயற்படுத்தப்படும் 'தலைக்கோர் நிழல்' திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சில வீடமைப்பு திட்டங்களின் சிறப்புத் தருணங்களை இங்கு காணலாம்.**




நெல்லியடி, தம்பியாப்புலம் கிழக்கு பிரதேசத்தில் வசிக்கும் திருமதி நல்லையா சுதர்ஷனி அவர்களுக்காக புதிய வீடொன்றை அமைப்பதற்காக அடிக்கல் நாட்டும் நிகழ்வொன்று 2023 ஜூலை 05ம் திகதி காலாட் படைத்தளபதியின் தலைமையில் இடம்பெற்றது. வண.எம்எஸ் சின்னையா மற்றும் திருமதி தபிதா சின்னையா ஆகியோர் தமது தந்தை திரு. ஜோய் அருள்ராஜாவின் நினைவாக "வன்னி எய்ட்ஸ்" அமைப்புடன், கனடாவில் வசிக்கும் மேஜர் ஜெனரல் ஆர் ரத்னசிங்கம் (ஓய்வு) அவர்களுடன் இணைந்து இந்த வீடமைப்பு திட்டத்திற்கான நிதி அனுசரணையை வழங்கினர்.

இல. ஜே/429, வத்திராயன், கட்டைக்காடு, விலாசத்தில் வசித்திருக்கும் திரு. ஜெஸ்லி ஜெயராஜ் அவர்களின் பொருளாதார நெருக்கடிகளை கருத்திற்கொண்டு யாழ் பாதுகாப்பு படைத்தலைமையக படையினர் தம் 769 வது புதிய வீட்டை குறித்த பயனாளிக்காக நிர்மாணித்தனர். குறித்த




வீட்டை வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட யாழ் பாதுகாப்புப் படைத் தலைமையக தளபதி அவர்கள் பயனாளிக்கு மேலும் அவசியமான உலர் உணவுப் பொதிகள் மற்றும் அத்தியாவசிய வீட்டுப் பொருட்களையும் அன்பளிப்பாக வழங்கினார்.

இராணுவத்தின் வீடமைப்பு திட்டத்தின் கீழ் உரும்பிராயில் நிர்மாணிக்கப்பட்ட 770 வது வீடு, Np 265 உரும்பிராய் தெற்கு கிராமசேவை பிரிவில் வசிக்கும் திருமதி சந்தீபா விமலகாந்தன் அவர்களுக்கு யாழ் படைத்தலைமையக தளபதியால் கையளிக்கப்பட்டது. கனடாவில் வசிக்கும் மேஜர் ஜெனரல் ரவி ரத்னசிங்கத்தின் (ஓய்வு) ஒருங்கிணைப்பின் மூலம் வெளிநாட்டைச் சேர்ந்த திருமதி ஹெய்லி மேடிசன், திரு டேனியல் மிலன் பாலராஜ் மற்றும் "வன்னி எய்ட் ஒப் கனடா" அமைப்புடன் இணைந்து இத்திட்டத்திற்கான நிதியுதவியை வழங்கினர். குறித்த நிகழ்வு 2023 ஜூலை நான்காம் திகதியன்று இடம்பெற்றது.







52 வது காலாட்படைப்பிரிவு தளபதியின் வழிகாட்டலின் கீழ் மிருசுவில் பிரதேசத்தில் வசிக்கும் பொருளாதார இன்னல்களால் துன்புறும் குடும்பமொன்றிற்கு புதிய வீடமைத்துக் கொடுப்பதற்காக அடிக்கல் நாட்டப்பட்டது. குறித்த நிகழ்வு 2023 ஆகஸ்ட் 02ம் திகதி குறித்த தளபதியின் தலைமையில் இடம்பெற்றது. குறித்த வீட்டின் கட்டுமானப்பணிகள் 'Imagine Compassion' எனும் அரசு சார்பற்ற அமைப்பின் நிதியனுசரணையுடன் 11 வது பொறியியல் படையணியின் பங்களிப்புடன் இடம்பெறவுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




68 வது காலாட் படைப்பிரிவின் தளபதியின் வழிகாட்டலின் கீழ் குறைந்த வருமானமுடைய குடும்பமொன்றிற்காக புதிய வீடொன்று அமைக்கப்பட்டு 2023 ஜூன் 31ம் திகதி அன்பளிப்பு செய்யப்பட்டது. குறித்த நிகழ்வின் பிரதம அதிதியாக முல்லைத்தீவு பாதுகாப்பு படை தலைமையக தளபதி கலந்து கொண்டார். 1.5 மில்லியன் ரூபாய் செலவிலான இந்த வீட்டை 6 வது கெமுனு ஹேவா படையினர் 02 மாதங்களில் அமைத்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.




உடையார்கட்டு சுகந்திபுரத்தில் வசிக்கும், பொருளாதார நெருக்கடிகளினால் அல்லலுறும் திரு. விஜயகுமார் தனுஷ னின் நிலையை கவனத்தில் கொண்டு இராணுவத்தினர் அவருக்காக புதிய வீடொன்றை நிர்மாணித்தனர். 2023 ஜூலை 31 ம் திகதி முல்லைத்தீவு பாதுகாப்பு படைத் தலைமையக தளபதியின் தலைமையில் பயனாளிக்கு வீடு வழங்கப்பட்டது. இரண்டு மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட இந்த வீட்டை பயனாளிக்கு ஒப்படைக்கும் நிகழ்வில் அவருக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் மற்றும் நிதியுதவிகளும் வழங்கப்பட்டன.




1 ஆம் படைத் தலைமையக நலத்திட்டத்தின் கீழ் 2 வது கொமாண்டோ படையணியின் படையினர் சமூகநல சேவையொன்றை முன்னெடுத்தனர். திருமணமாகி இரு குழந்தைகளுடன் நிரந்தர வாழ்வாதாரமின்றி திரு. கேதீஸ்வரன் அவர்கள் கட்டத்துவங்கிய புதிய வீடு நிதி தட்டுப்பாடுகளின் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. இதனை அவதானித்த 2 வது கொமாண்டோ படையினர், வீட்டின் மீதி கட்டுமானப்பணியை 2 வது கொமாண்டோ படையணியின் கட்டளை அதிகாரியின் வழிகாட்டுதலின் கீழ் முன்னெடுத்தனர். கொமாண்டோ படையணியின் படைத் தளபதியின் தலைமையில் பயனாளிடம் குறித்த வீடு ஆகஸ்ட் 31ம் திகதி கையளிக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பில் வசிக்கும் திரு. தியாகராஜா அவர்களுக்காக இராணுவத்தால் அமைக்கப்பட்ட புதிய வீடு, ஜூலை 31 திகதி முல்லைத்தீவு பாதுகாப்பு படைத் தலைமையக தளபதி அவர்களால் பயனாளியிடம் கையளிக்கப்பட்டது. பயனாளிக்கு புதிய வீட்டிற்கு அவசியமான அத்தியாவசிய பொருட்களும் இந்நிகழ்வில் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இதற்கான 2 மில்லியன் ரூபா நிதியுதவியை திரு கே சாந்தா, திரு எம் சுமன், திரு எஸ் புனிதவலன் மற்றும் திரு எம் பி என்டன் ஆகியோர் இராணுவத்திற்கு வழங்கியதோடு, இராணுவத்தின் தொழிநுட்ப மற்றும் மனிதவள பங்களிப்புடன் வீடு நிர்மாணிக்கப்பட்டது.




வடகஹக பிரதேசத்தில் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் வீடமைப்பு திட்டத்தின் இன்னுமொரு நிகழ்வாக பொருளாதார சிக்கல்களால் அல்லலுறும் ஒரு குடும்பத்திற்கு புதிய வீடொன்று நிர்மாணிக்கப்பட்டு 6 வது இலங்கை தேசிய பாதுகாப்பு படையணியினரால் 2023 ஜூலை 13 திகதி பயனாளிகளுக்கு அளிக்கப்பட்டது. 06 ம் பகுதி, சிவநகர், புதுக்குடியிருப்பு எனும் முகவரியில் வசிக்கும் சுப்பையா கனகலிங்கம் அவர்களுக்கு 3,2000,000.00 பெறுமதியான வீடு மற்றும் வீட்டிற்கு அவசியமான பொருட்களுடன் அன்பளிப்பு செய்யப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீக்கிரையான வீட்டை புனரமைத்து சகோதர சிப்பாய்க்கு வழங்கிய இராணுவ வீரர்கள்.






241 வது காலாட் பிரிகேட் படையினர், தம்முடன் பணிபுரியும் பெண் சிப்பாயொருவரின் தீக்கிரையான வீட்டை புனரமைத்து குறித்த வீட்டிற்கு அவசியமான பொருட்களுடன் சிப்பாயின் பயன்பாட்டிற்காக வழங்கினர். 24 வது காலாட் படைப்பிரிவில் சேவையாற்றும் 3 வது (தொ) இராணுவ மகளிர் படையணியின் தமிழ் பெண் சிப்பாய் டிரோனா டி அவர்களின் வீடே இவ்வாறு தீக்கிரையானது. 241 வது காலாட் பிரிகேட் தளபதியின் அறிவுரைகளின் படி 11வது இலங்கை தேசிய பாதுகாவலர் படையணியின் பங்களிப்புடன் அக்கரைப்பற்று வாழ் தமிழ் மற்றும் முஸ்லிம் வர்த்தகர்களின் 842,754.00 ரூபா பெறுமதியான நிதியுதவியுடன் குறித்த சிப்பாயின் வீட்டினை முழுமையாக புனரமைக்கக் கூடியதாக இருந்தது. 24 வது காலாட் படைப் பிரிவின் தளபதி , பிரதம அதிதியாக கலந்து கொண்டு புனரமைக்கப்பட்ட வீட்டை திறந்து வைத்ததுடன் வீட்டின் சாவியை பெண் சிப்பாய் மற்றும் அவரது பாட்டியிடம் அதிகாரப்பூர்வமாக ஒப்படைத்தார். இதேவேளை, பிரதம அதிதியால் குடும்பத்திற்கு தேவையான வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் என்பனவும் அன்பளிப்பு செய்யப்பட்டன.

# சகோதர சிப்பாய்க்கு புதிய வீட்டிற்காக அடிக்கல் நாட்டுதல்



முள்ளிவாய்க்கால்

68 வது காலாட் படைப்பிரிவு படைத்தளபதியின் எண்ணக்கருவிற்கேற்ப குறித்த படைப்பிரிவு அதிகார எல்லைக்குட்பட்ட முள்ளிவைக்கால் (கிழக்கு) முல்லைத்தீவு எனும் பிரதேசத்தில் வசிக்கும் லான்ஸ் கோப்பிரல் கேஷியா எனும் பெண் சிப்பாய்க்காக புதிய வீடொன்றை அமைப்பதற்காக அடிக்கல் நாட்டும் நிகழ்வொன்று இடம்பெற்றது.

# இயக்கச்சி நார் ஆலையின் தீ இராணுவத்தால் அணைப்பு.

யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் 52 வது காலாட் படைப்பிரிவின் படையினர் 2023 செப்டெம்பர். 8ம் திகதி இயக்கச்சி, முஹாவிலில் உள்ள தென்னை நார் ஆலையில் ஏற்பட்ட தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். 52 வது காலாட் படைப்பிரிவின் தளபதி மற்றும் 522 வது காலாட் பிரிகேட் தளபதி ஆகியோரின் அறிவுறுத்தலின் படி இயக்கச்சி தீயணைப்புப் பிரிவினருடன் இணைந்து 60 க்கும் மேற்பட்ட சிப்பாய்கள் இராணுவ நீர் பவுஸர்களின் உதவியுடன் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறமைக்கோர் மேடை

## தன்னம்பிக்கை...!

நம்சின்னச் சின்ன இன்னல்கள் கூட

சின்னாபின்னமாக்கிவிடும்

எவரும் எதிலும வெற்ற பெற உன்னுள்
என்றும் இருக்கட்டும்

தன்னம்பிக்கை எனும் தீப்பொறி

விடியும் என்று விண்ணை நம்புவது போல்

முடியும் என்று உன்னை நம்பு

உன்னால் நிச்சயம் முடியும்

சோதனைகள் இல்லாமல் இங்கு சாதனைகள்
இல்லை.

இங்கு சாதித்தவன் எல்லாம் சோதனைகளை
கடந்தவர்கள் தான்.

தன்னம்பிக்கையோடு முயற்சி செய்து
கொண்டே இரு

தோல்வியும் ஒரு நாள் உன்னிடம் தோற்றுப்
போகும்.

தயங்கினால் நீயே உனக்கு தடைக்கல்
ஆவாய்

முயன்றால் நீயே முன்னுதாரணமாவாய்.

துயரத்தினை தூசு என தட்டி விடு

உயரங்களை மெல்ல நீயே எட்டி விடு

ஆக்கம் : பெண் சிப்பாய் – விதூஜா

## அப்பா...!

தங்கியிருந்த தாயின் கருவறை புனிதமானது.
அதேபோல் விழும்போது தாங்கிக் கொண்ட
அப்பாவின் தோள்களும் புனிதமானவையே..!

பலரது வாழ்வில் கடைசிவரை விளங்கிக்
கொள்ள முடியாத புத்தகம் அப்பா..!
தாங்கிப்பிடிக்க அம்மாவும் தூக்கி நிறுத்த
அப்பாவும் இருக்கும் வரை யாரும்
வீழ்வதில்லை..!

பிள்ளைகள் கேட்கும் பொருளை வாங்கிக்
கொடுப்பதில் தான் அப்பாவின் சந்தோஷம்
நிறைந்திருக்கிறது.

லான்ஸ் கோப்பிரல் – சரோஜினி

## உறவுகள்!

சின்னஞ் சிறு குருவிகளாய் பறக்க ஆசையே!

எனக்கு சிரித்து மகிழ்ந்து சுதந்திரமாய் வாழ
ஆசையே

உறவுகளை உன்னதமாய் மதிக்க ஆசையே!

எனக்கு அன்னை தந்தை அன்புடனே வாழ
ஆசையே

அன்னை தந்தை அன்பினிலே உறவு நிலை
பெறும்

என்றும் உயர் பறந்து சென்றிடவே கரம்
கொடுத்திடும்.

பொன்னும் பொருளும் மண்ணும் மலையும்
அழிந்த போதிலும

உண்மை உறவு நிரந்தரமாய் என்றும்
வாழ்ந்திடும்

பாசம் நேசம் அன்பும் காப்பும் உறவு தந்திடும்

தனிமை என்னை வாட்டும் போது உறவு
அணைத்திடும்

சிதறிச் சென்ற உறவுகளை ஒன்று சேர்த்திட

சிறுவர்களே ஒன்று சேர்ந்து உழைத்திடுவோமே

லு. கௌசல்யா
தரம் 08
ஞானமுதல்வா தமிழ் வித்தியாலயம்

## நான் உன்னுடையவள் என்றால்...!

நான் உனது மூச்சுக்காற்று என்றால்,

நான் காற்றைப்போல் உன் அருகில் இருக்கிறேன்...!

நான் உனது நிழல் என்றால்,

மரமாக உன் அருகில் இருக்கிறேன்..!

நான் உனது பலம் என்றால்,

என் உயிரை உனக்கு தருகிறேன்...!

நான் உனது தவம் என்றால்,

நான் உனது மனதில் தினம் இருக்கிறேன்...!

மறுபிறவியில் நான் உன்னுடையவள் என்றால்

இப்பிறவியில் உன் கல்லறையில் தவம்
இருக்கிறேன்.

லான்ஸ் கோப்பிரல் எஸ் சுவேந்தினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் சிறாரின் எதிர்காலம் வளம்பெற...!



## உன்னிச்சாய்

4வது கெமுணு ஹேவா படையினரால் மட்டக்களப்பு உன்னிச்சாய் பிரதேசத்தில் அமைந்திருக்கும் கரவெட்டியாறு விஜிதா வித்தியாலயத்தின் 1 ம் தரத்திலிருந்து 5 தரம் வரையிலான 20 மாணவர்களுக்கு அவசியமான கற்றல் உபகரணங்களை அன்பளிப்பு செய்யும் நிகழ்வொன்று 2023 ஆகஸ்ட் 23 திகதி நடத்தப்பட்டது. ஒரு மாணவருக்கு தலா 2500 ரூபாய் பெறுமதியான பாடசாலை உபகரண்ங்கள் அளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## உன்னிச்சாய்

23 வது காலாட் படைப்பரிவின் 26 வது ஆண்டு விழாவிற்கு இணையாக மட்டு/ககு கிரிமிச்சோவை தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் 30 மாணவர்களுக்கு ரூபாய் 150000.00 பெறுமதியான பாடசாலை புத்தகங்கள் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் மற்றும் பகலுணவு வழங்கும் நிகழ்வொன்று 23 வது படைப்பிரிவின் படைத்தளபதியன் அறிவுரைகளுக்கேற்ப 6 வது கஜபா படையணியின் மற்றும் 233 காலாட் படைப்பிரிவினரால் 2023 ஜூலி 22 தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.






## ஓட்டமாவடி

இலங்கை ஊடக ஒன்றியத்துடன்  ஒருங்கிணைந்து இலங்கை இராணுவத்தினர், பொருட்கள் பகிர்ந்தளிக்கும் நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தனர். குறித்த நிகழ்வு 2023 ஜூலை மாதம் 19ம் திகதி, ஓட்டமாவடி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் 100 பாடசாலை மாணவர்களுக்கு தலா 1000.00 ரூபாய்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இந்த தொகையானது அவர்களது மேற்படிப்பு முடியும் வரை மாதாந்தம் வழங்கப்படும். என்பது குறிப்பீடத்தக்க விடயமாகும்.

## அக்கறைப்பற்று

24 வது காலாட் பிரிகேட் படையினரால் 2023 ஜூன் 24ம் திகதி அக்கறைப்பற்று சுவாமி விபுலானந்தா சிறுவர் இல்லத்தின் 40 மாணவர்களுக்காக பாடசாலை உபகரணஙகள், பகிர்ந்தளிக்கும் நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. 241 வது காலாட் பிரிகேட் தளபதி வெளிநாடுகளில் வசிக்கும் கொடையாளர்களின் அனுசரணையுடன் குறித்த நிகழ்வை மேற்கொண்டுள்ளார்.



## மன்னார்



542 வது காலாட் பிரிகேட் படையினர் , சிங்கப்பூரின் "வில்லிங் ஹார்ட்ஸ்" அறக்கட்டளை மற்றும் வவுனியாவில் உள்ள "மஹாகருணா" சங்கத்தின் உறுப்பினர்களுடன் இணைந்து தகுதியான 150 மாணவர்களுக்கு உலர் உணவுப் பொதிகள் மற்றும் பாடசாலை உபகரணங்களை வழங்கும் நிகழ்வொன்றை நடாத்தினர். மன்னார் மாவட்டத்தில் மடு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட குறைந்த வருமானமுடைய குடும்பங்களின் 150 மாணவர்களுக்கு பாடசாலை உபகரண பொதிகளும் உலர் உணவு பொதிகளும் இந்நிகழ்வின் மூலம் வழங்கப்பட்டன. குறித்த நிகழ்வு, 2023 ஆகஸ்ட் 22 ம் திகதி மடு தேவாலயத்தில் இடம்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




573 வது காலாட் பிரிகேட் படையினர், ஜூலை 25 ஏற்பாடு செய்திருந்த நிகழ்வின் மூலம் மாங்குளம் மகா வித்தியாலயம் மற்றும் சண்முகரத்தினம் ஆரம்பப் பாடசாலைகளுக்கு நூலகப் புத்தகங்களை நன்கொடையாக வழங்கினர். 573 வது காலாட் பிரிகேட் படையணியின் சிவில் அலுவல்கள் அதிகாரி, ரோயல் கல்லூரியின் அதிபர் திரு.மஹிந்த கலகெதர, கொழும்பு ரோயல் கல்லூரியின் தலைவர் திரு. ரசிக கலபதி ஆகியோரின் ஒத்துழைப்புடன் "நெனபஹன" அமைப்பின் தலைவர் றோயல் கல்லூரியின் நூலக வாசிப்பாளர் சங்கத் தலைவர், கொழும்பு றோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றத் தலைவர், மற்றும் மாணவர் ஒருங்கிணைப்பாளர் திரு.தரிந்து விக்கிரமசிங்க ஆகியோரினால் 500க்கும் மேற்பட்ட புத்தகங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டன. இந்நிகழ்வின் பிரதம அதிதியாக 57 வது காலாட் படைப்பிரிவின் தளபதி கலந்து கொண்டார்.



### பூனாகலை

பாதுகாப்பு மத்திய படைத்தலைமையக அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் அமைந்திருக்கும் ப / பூனாகலை தமிழ் மகா வித்தியாலயத்தின் மாணவ தலைவர்களுக்கு இலச்சினைகள் வழங்கும் நிகழ்வொன்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக இராணுவ அதிகாரிகள் கலந்து சிறப்பித்தனர்.




233 வது காலாட் பிரிகேட் தளபதியின் ஒருங்கிணைப்பின் மூலம் நன்கொடையாளரின் அனுசரணையில் 233 வது காலாட் பிரிகேடினரால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு பொழுதுபோக்கு நிகழ்ச்சி மற்றும் விசேட மதிய உணவு விருந்தொன்று 01 ஓகஸ்ட் 2023 அன்று கதிரவெளி திலகவதியார் சிறுவர் இல்லத்தின் சிறுவர்களுக்காக சல்லித்தீவு கடற்கரையில் இடம்பெற்றது. பிள்ளைகளின் மன அழுத்தத்தைக் குறைத்து அவர்களை மகிழ்ச்சியடையச் செய்யும் நோக்கத்தில் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்நிகழ்வின் மூலம் 29 பிள்ளைககள் மற்றும் பணியாளர்களுக்கு பாடசாலைப் பொருட்களும் ஆடைகளும் அன்பளிப்பு செய்யப்பட்டன.




யாழ்ப்பாண குடாநாட்டின் வடமராட்சி கல்வி வலயத்தின் கோட்டாவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை மற்றும் பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை ஆகியவற்றின் தரம் 9, 10 மற்றும் 11 ஆம் தரங்களில் பயிலும் குறைந்த வருமானம் பெறும் மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் 55 வது காலாட் படைபிரிவின் 551 வது காலாட் பிரிகேட்டின் ஒருங்கிணைப்பில் ஆங்கிலம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாட வகுப்புகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டன. அவசியமான மாணவர்களுக்கு வாரத்தில் இரண்டு நாட்கள் பாடசாலைக்குப் பின் வகுப்புகளை நடத்தும் இந்த செயற்றிட்டத்தில் பங்களிப்பு வழங்கும் ஆசிரியர்களுக்கு மாதாந்தம் ரூபா 12,000 வழங்குவதற்கு அவசியமான நிதியுதவிகள், மேஜர் ஜெனரல் (ஓய்வு) ரவி ரத்னசிங்கம் அவர்களின் ஒருங்கிணைப்பு மூலம் கனடாவை தளமாகக் கொண்ட "வன்னி எய்ட்ஸ்" அமைப்பினால் வழங்கப்படவுள்ளன.

### யாழ்ப்பாணம்

11வது இலங்கை காலாட் படையினரின் அனுசரணையில் யாழ் வட்டுகார்த்திகன்யா ஆரம்ப பாடசாலையில் கல்வி கற்கும் மாணவ மாணவியர்க்காக அமைக்கப்பட்ட புதிய வகுப்பறை 2023 ஜூலை 17ம் திகதி திறந்து வைக்கப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முல்லைத்தீவு பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் 592 வது காலாட் பிரிகேட் படையினர், கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர் சங்கம் இணைந்து வழங்கிய அனுசரணையில் "அதஹித" நிறுவனத்தின் ஸ்தாபகரான திரு. பிரபாத் லொகுபாலசூரியவின் ஒருங்கிணைப்பின் ஊடாக வழங்கிய உதவி மூலம் தண்ணிமுறிப்பு ஆரம்பப் பாடசாலை மற்றும் உன்னாப்பிலவு ஆரம்பப் பாடசாலையில் கல்வி கற்கும் 110 மாணவர்களுக்கு, செவ்வாய்க்கிழமை 2023 ஜூலை 04ம் திகதி கற்றல் உபகரணங்களை வழங்கினர்.






பாடசாலை செல்லும் பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களுக்கு முன்னுரிமை அளித்து மின்சாரம் இல்லாத 60 குடும்பங்களுக்கு சூரிய சக்தியில் இயங்கும் மின்குமிழ்கள் வழங்கும் திட்டமொன்று இராணுவத்தால் முன்னெடுக்கப்பட்டது. பயனாளிகளின் வாழ்வாதாரத்தின் நிலையை கருத்திற்கொண்டு அந்தந்த கிராம சேவகரின் கருத்துகளுக்கமைய மேற்கொள்ளப்பட்ட இந்நிகழ்வில் முல்லைத்தீவு பாதுகாப்புப் படைத் தலைமையக தளபதி பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இந்நிகழ்வு ஜூலை மாதம் 22 திகதி 64 வது படையகத்தில் இடம்பெற்றது.

553 வது காலாட் பிரிகேட் படையினர், மரக்கன்றுகள் மற்றும் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வொன்றை 31 ஒகஸ்ட் 2023 அன்று யாழ்ப்பாணத்தின் இராமநாதபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நடத்தினர். இதன் மூலம் 200 மாணவர்களுக்கு பாடசாலை பைகள், கற்றல் உபகரணங்கள் மற்றும் அத்தியாவசிய பாடப் புத்தகங்கள் பரிசாக வழங்கப்பட்டன. இராணுவத்தின் வேண்டுகோளுக்கு இணங்கிய நன்கொடையாளர்கள் இதற்கான நிதியுதவிகளை வழங்கினர்.







இராணுவ ஒருங்கிணைப்பின் மூலம் இங்கிலாந்தின் "Chesnut Foundation" அமைப்பினால் வழங்கப்பட்ட அனுசரணையின் மூலம் வல்வெட்டித்துறை சிதம்பரம் கல்லூரியில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த 50 மாணவர்களுக்கு பாடசாலை பைகள் வழங்கப்பட்டன. கலாநிதி நதீத் கௌசல்ய அவர்கள் இந்நிகழ்விற்கான அனுசரணையை வழங்கினார். இந்நிகழ்வு 2023 ஆகஸ்ட் 25 திகதி இடம்பெற்றது.




4 வது இலங்கை சிங்கப் படையணியின் படையினர், நன்கொடையாளர் ஒருவரின் ஆதரவுடன், நெல்லியடி மற்றும் பருத்தித்துறை பகுதிகளில் ஐந்து மற்றும் ஒன்பது வயதுடைய தகுதியான இரண்டு மாணவர்களுக்கு இரண்டு புலமைப்பரிசில்களை வழங்க ஏற்பாடு செய்தனர். இதன் மூலம் ஐந்து வருட காலத்திற்கு ஒவ்வொரு மாதமும் ரூபாய் 2000/= மாணவர்களின் ஆரம்பக் கல்வியை முடிக்கும் வரை அவர்களின் கல்விச் செலவுகளுக்காக வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# காத்த பிள்ளையார் கோயில் இராணுவத்தால் புனரமைக்கப்பட்டு பக்தர்களின் பூஜைகளுக்காக திறக்கப்பட்டது.



**முல்லைத்தீவு**

68 வது காலாட் படைப்பிரிவு தளபதியின் எண்ணக்கருவிற்கேற்ப குறித்த படை யணி அதிகார எல்லைக்குட்பட்ட பிரசேத்தில் அமைந்திருக்கும் "காத்த பிள்ளையார் கோயில்" இராணுவ வீரர்களால் புனரமைக்கப்பட்டது. மறுசீரமைக்கப்பட்ட கோயிலானது, பக்தர்களின் பயன்பாட்டிற்காக 2023 செப்டெம்பர் மாதம் 03ம் திகதி சுப முகூர்த்தத்தில் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்ட நூற்றுக்கு மேற்பட்ட பக்தர்களுக்காக இராணுவத்தினர் தேனீர் வழங்கி உபசரித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.




# முதல் பக்கத்தின் விபரம் இனிய நவராத்திரி நல்வாழ்த்துக்கள்

நவராத்திரி என்பது துர்கா தேவி போர் புரிந்த ஒன்பது நாள் இரவுகளையும், பத்தாம் நாள் அவர் பெற்ற வெற்றியையும் குறிக்கிறது. ஆகவே ஒன்பது நாட்களை நவராத்திரி தினமாகக் கொண்டாடி பத்தாம் நாள் விஜய தசமியாகக் கொண்டாடப்படுகிறது. நவராத்திரி பண்டிகையின் 9 நாட்களில் முதல் 3 நாட்கள் துர்க்கைக்காக அர்ப்பணிக்கப்படுகின்றன. இந்த முதல் 3 நாட்களும் மாஹேஸ்வரி, கௌமாரி,வாராஹி என்ற பெயர்களில் துர்க்கைக்கு சிறப்புப் பூஜைகள் நடைபெறும்.அடுத்த 3 நாட்கள் மகாலட்சுமிக்கு சிறப்புப் பூஜைகள் நடக்கும். மகாலட்சுமி, வைஷ்ணவி, இந்திராணி என்ற பெயர்களில் இப் பூஜைகள் நடக்கும். கடைசி 3 நாட்கள் சரஸ்வதி, நரசிம்ஹி, சாமுண்டி என்ற பெயர்களில் சரஸ்வதிக்கு பூஜைகள் செய்யப்படும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உங்கள் சுகாதாரத்தில் அக்கறைக் கொள்ளும் இராணுவம்...!



### திருகோணமலை

6 வது இலங்கை கவச வாகன படையணி படையினர், ஜூலை 04 ம் திருகோணமலை மொரவெவ மாவட்ட வைத்தியசாலையில் இரத்த தான நிகழ்வொன்றினை ஏற்பாடு செய்திருந்தனர். இரத்த வங்கி மருத்துவ அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யப்பட்ட. இந்த நிகழ்வின் மூலம் 55 இராணுவ உறுப்பினர்கள் தம் இரத்தத்தை தானமளித்தனர்.



### ஒட்டுச்சுட்டான்

64 வது காலாட் படைப்பிரிவின் வேண்டுகோளின் படி ஜோர்ஜ் குணரத்ன ஒப்டிகல் நிறுவனத்தின் அனுசரணையில் ஒட்டுச்சுட்டான். பிரதேச செயலக அதிகார பிரதேசத்திற்குட்பட்ட கண்பார்வை குறைபாடுள்ள மக்களிடையே கண்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் 360,000.00 பெறுமதியான 200 மூக்குக்கண்ணாடிகள் அன்பளிப்பு செய்யப்பட்டன. குறித்த நிகழ்ச்சி 2023 ஜூலை 02 ம் திகதி ஒட்டுச்சுட்டான் தேசிய பாடசாலையில் இடம்பெற்றது.




முல்லைத்தீவு பாதுகாப்பு படை தலைமையகத்தின் 68 வது காலாட் படைப்பிரிவு படையினரால், ஆகஸ்ட் 13 உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் கண் மருத்துவ சிகிச்சை முகாமின் போது பல்வேறு பார்வை குறைபாடுகள் மற்றும் கண் நோய்களால் பாதிக்கப்பட்ட சுமார் 464 பொதுமக்களுக்கு மருத்துவ ஆலோசனைகள் மற்றும் சிகிச்சைகளைப் பெறுவதற்கான அரிய வாய்ப்பு கிடைத்தது. இதன் மூலம் யாழ் போதனா வைத்தியசாலையில் 139 பொதுமக்களின் கண்புரை சத்திரசிகிச்சைகளுக்கு அனுசரணையும் 100 வாசிப்புக் கண்ணாடிகளும் இலவசமாக வழங்கப்பட்டன.

233 காலாட் பிரிகேட் படையினரால் தனது கட்டளை பிரதேசங்களில் வாழும் மக்களின் சுகாதாரத் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன், நடமாடும் மருத்துவ முகாமொன்றை நடாததப்பட்டது. களனிப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பேராசிரியர். திரு ஜானக ராமநாயக்க, டாக்டர் டினுஷா பெரேரா மற்றும் 31 மருத்துவ நிபுணர்கள் குறித்த முகாமில் கலந்து கொண்டனர்.இதன் மூலம் 200 க்கும் மேற்பட்ட மக்கள் மருத்துவ ஆலோசனைகள், மருந்துகள் மற்றும் மருத்துவ பரிசோதனைகளை இலவசமாக பெற்றுக் கொண்டனர்.குறித்த முகாம் 2023 ஜூலை 09 ம் திகதி இடம்பெற்றது.







வன்னி பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் கீழ் கடமையாற்றும் 136 இற்கும் மேற்பட்ட படையினர், வவுனியா மாவட்ட வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு இரத்தம் வழங்கும் நோக்குடன் ஜூன் 24ம் திகதியன்று வன்னி தள வைத்தியசாலையில் இரத்ததானம் செய்தனர். இந்நிகழ்வின் போது அதிக தடவைகள் இரத்ததானம் செய்த இராணுவ அதிகாரி டிஎம்டிஆர் பிரியங்க மற்றும் சார்ஜன் பீடிஎல்பீ திலகசிறி ஆகியோர் இரத்த வங்கி அதிகாரிகளிடமிருந்து பாராட்டுச் சின்னங்களையும் சான்றிதழ்களையும் பெற்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வை வென்றிட இராணுவத்தின் அன்புக்கரம்






51 வது காலாட் படையணியின் 28 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு குறித்த படையணியின் படைத்தளபதியின் வழிகாட்டலின் கீழ் வரையறுக்கப்பட்ட ∴பொன்டெரா நிறுவனத்தின் நிதி அனுசரணையின் கீழ் யாழ் பிரதேசத்தின் செல்வபுரம் மற்றும் யோகபுரத்தில் வசிக்கும் பொருளாதார சிக்கல்களின் மத்தயில் வாழும் 100 குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வின் மூலம் ஒரு குடும்பத்திற்கு தலா ரூபாய் 5000 பெறுமதியான உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டன. நன்கொடையாளர்களின் அனுசரணையின் கீழ் பலை வடக்கு தமிழ் கலவன் பாடசாலை, பொன்னாலை வரதராஜ பெருமாள் பாடசாலை, சங்கரதெய் சின்னம்மா பாடசாலை மற்றும் கார்த்திகேய பாடசாலை எனும் பாடசாலைகளின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி பணிகளுக்காக தலா ரூபாய் 100,000 பணத்தொகையை அன்பளிப்பு செய்யும் நிகழ்வும் இடம்பெற்றது. வடக்கு அரச தமிழ் பாடசாலைகளை மையப்படுத்தி இடம்பெற்ற இந்நிகழ்வில் கலந்து கொண்ட 200 பாடசாலை மாணவர்களுக்கு தேனீரும் வழங்கப்பட்டன.

---




மேற்கு பாதுகாப்பு படை தலைமையகத்தின் 143 வது காலாட் பிரிகேட் படையினரால், நன்கொடையாளர்களின் உதவியுடன் புத்தளம் ஆதார வைத்தியசாலையின் காற்று மெத்தைகளின் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்பட்டது. திரு முகமது ரிஸ்வி, திரு முகமது நௌஷாத், திருமதி ருவானி, திரு நுவன் ரத்நாயக்க மற்றும் திரு சஞ்சீவ சமரசிங்க ஆகியோர் இராணுவத்தின் வேண்டுகோளுக்கு இணங்க குறித்த 5 காற்று மெத்தைகளுக்கான நிதியுதவியை வழங்கினர். 143 வது காலாட் பிரிகேட் தளபதி பிரிகேடியர் டி.எம்.எப் கிச்சிலன் அவர்களின் அறிவுரையின் பேரில் 16 வது கஜபா படையணியின் கட்டளை அதிகாரியின் மேற்பார்வையில் குறித்த படையலகின் ஆதரவுடன் குறித்த மெத்தைகள் 2023 ஓகஸ்ட் 24 புத்தளம் ஆதார வைத்தியசாலை பணிப்பாளரிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தனர்.

# கடற்கரை வளாக தூய்மைப்படுத்தல் பணிகள்




யாழ். பாதுகாப்பு படை தலைமையக தளபதி வழங்கிய வழிகாட்டுதலுக்கிணங்க பருத்தித்துறையை தளமாக கொண்டுள்ள 250க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் மற்றும் உள்ளூர்வாசிகள் ஜூன் 28ம் திகதி சத்கோட்டை மற்றும் ஊரணி கடற்கரையில் குப்பைகளை அகற்றும் சமூக பணியினை மேற்கொண்டனர்.

பருத்தித்துறை பிரதேச செயலக அலுவலகம் மற்றும் பருத்தித்துறை பிரதேச சபையின் ஒத்துழைப்புடன் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பருத்தித்துறை நகர சபை ஊழியர்கள் , கிராம அபிவிருத்திக் குழுக்கள், விளையாட்டுக் கழக உறுப்பினர்கள், அனர்த்த முகாமைத்துவ நிலைய உறுப்பினர்கள், பொலிசார் மற்றும் பாடசாலை மாணவர்களும் இராணுவ வீரர்களுடன் குறித்த பணியில் ஈடுபட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இராணுவ பாசறையை அகற்ற வேண்டாம்" என பொதுமக்கள் போராட்டம்






பருத்தித்துறை, கற்கோலத்தில் அமைந்துள்ள 4 வது இலங்கை சிங்கப் படையணியின் இராணுவ முகாமை அங்கிருந்து நகர்த்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அனுமானித்துள்ள நிலையில் பொதுமக்கள் சிலர் ஆகஸ்ட் 14 ம் திகதி முகாமுக்கு முன்பாக பதாதைகள் ஏந்தி அமைதியான முறையில் போராட்டம் நடத்தினர். "இராணுவ முகாமை அகற்றக் கூடாது", "முகாமினை அகற்றுவதை நாங்கள் கண்டிக்கிறோம்", "இராணுவ முகாமை அகற்றுவதை நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்" போன்ற பதாகைகளுடன் இப் போராட்டம் சுமார் இரு மணி நேரம் அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தின் இறுதியில் அவர்கள் தம் கோரிக்கையை எழுத்து ஆவணமாக 150ற்கு மேற்பட்ட கையெழுத்துக்களுடன் முகாம் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்துள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல், சட்டவிரோத மணல் அகழ்வு, திருட்டு மற்றும் சமூக விரோத செயல்கள் உள்ளிட்ட அனைத்து வகையான சட்ட விரோத செயல்கள், குறித்த பிரதேசத்தில் இடம்பெறாமைக்கு இராணுவ வீரர்கள் அப்பகுதியில் இருப்பதே காரணம் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் தெரிவித்தனர்.

---

# 231 வது காலாட் பிரிகேடினால் நீச்சல் வீரருக்கு பாராட்டு

மட்டக்களப்பு



மட்டக்களப்பு கல்லடியைச் சேர்ந்த 20 வயது இளைஞரான திரு.தவேந்திரன் மதுஷிகன் அண்மையில் இந்தியாவின் தனுஷ்கோடியிலிருந்து இலங்கையின் தலைமன்னார் வரை 12 மணி 58 நிமிடங்களில் நீந்தி, இந்தியப் பெருங்கடலை நீந்திக்கடந்த 4வது நபராக சாதனை படைத்தார். ஜூலை 04ம் திகதி 231 வது காலாட் பிரிகேட் தளபதி பிரிகேடியர் திலுப பண்டார அவர்களின் ஆலோசனையின் பேரில் மட்டக்களப்பு 231 வது காலாட் பிரிகேட் படையினர் சாதனையாளருக்கு அவரது சொந்த ஊரில் வரவேற்பளித்ததுடன் அவரை 231 வது காலாட் பிரிகேட் தலைமையகத்திற்கு வரவழைத்து கௌரவித்தனர். இந்நிகழ்வின் போது குறித்த இளைஞரது துணிச்சலான செயலைப் பாராட்டிய 231 வது காலாட் பிரிகேட் தளபதி சிறப்பு நினைவுச் சின்னத்தையும் வழங்கியதோடு மட்டக்களப்பு எம்ஜேஎப் லயன்ஸ் கழகத்தினர் நிதியுதவி வழங்கி கௌரவித்தனர்.

## உங்கள் கருத்துக்களை எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

பாதுகாப்பு படை தலைமையகம் (யாழ்ப்பாயணம்) 021 2222112

பாதுகாப்பு படை தலைமையகம் (வன்னி) 024 2222152

பாதுகாப்பு படை தலைமையகம் (கிழக்கு) 027 2259137

பாதுகாப்பு படை தலைமையகம் (முல்லைத்தீவு) 011 3009729

இராணுவ தலைமையகம் 011 2993076

**மின்னஞ்சல்**

*ranaviruwa@yahoo.com*

**முகவரி**

இராணுவ தலைமையகம்
ஸ்ரீ ஜயவர்தனபுரம்
கொழும்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா வர்த்தக சங்கத்தின் புதிய கட்டிட திறப்பு விழா



**வவுனியா**

வவுனியா வர்த்தக சங்க தலைவர் சண்முகராஜா சுஜேன் அவர்களது வேண்டுகோளின் படி, வன்னி பாதுகாப்பு படைத் தலைமையக தளபதியின் அறிவுறுத்தல்களின் படி இராணுவ வீரர்களின் சிரம ஒத்துழைப்பில் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டிடம் 2023 ஜூலை 09 திகதி சுப முகூர்த்தத்தில் திறந்து வைக்கப்பட்டது.

# கட்டைக்காடு புனித மரியாள் தேவாலயத்தின் வருடாந்த உற்சவத்திற்கு இராணுவம் உதவியது.

**கட்டைக்காடு**

522 வது காலாட் பிரிகேட் படையினரால் 2023 ஓகஸ்ட் 15 கட்டைக்காடு புனித மரியாள் தேவாலயத்தில் வருடாந்த உற்சவத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு முழுமையான ஆதரவு வழங்கப்பட்டது. இதன் மூலம் பிரதேசத்திலுள்ள சமூகத்தினருடன் நல்லுறவைப் பேணும் வகையில், இராணுவத்தினர், தேவாலயத்தில் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு பக்தர்களின் பயன்பாட்டிற்காக குடிநீர் வசதிகள், மற்றும் தற்காலிக குடில்கள் அமைத்து கொடுக்கப்பட்டன.



# கருத்தரிக்கச் செய்த மீன்கள் மரதமடுகுளத்திற்கு விடுவிப்பு



**மரதமடுகுளம்**

நன்னீர் மீன்பிடி கைத்தொழிலில் ஈடுபடும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் படையினரால் குளத்தில் திலாபியா வகை மீன்கள் மற்றும் கருத்தரிக்கச் செய்த 2000க்கும் அதிகமான மீன் குஞ்சுகள் விடுவிக்கப்பட்டன. 2023 ஆகஸ்ட் 23 இடம்பெற்ற இந்நிகழ்வில் 681 வது காலாட் பிரிகேட் தளபதி, நன்னீர் மீன் வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை உட்பட்ட மீனவர்கள் கலந்து கொண்டனர்.

# போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வொன்று...

55 வது காலாட் படைப்பிரிவு தளபதியின் கருத்திற்கேற்ப, இளைய விளையாட்டு வீரர்களின் நன்னடத்தை மற்றும் எதிர்கால நன்மையை கருத்திற்கொண்டு போதைப்பொருள் நிவாரணம் மற்றும் போதைப்பொருட்களால் சமூகத்திற்கு ஏற்படும் பாதிப்பு தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்வொன்று 2023 ஜூலை 11 ம் திகதி இடம்பெற்றது. மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தின் சிரேஸ்ட அதிகாரியான திரு அப்துல் ரஹீம் அவர்களால் இந்த நிகழ்வு நடாத்தப்பட்டது. அதற்காக 14 விளையாட்டு கழகங்களின் 160க்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டனர்.

**யாழ்ப்பாணம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணத்திற்கு புன்னகையை கொண்டுவரும் இராணுவத்தின் வீடமைப்பு திட்டம்...!

'இல்லம்' என்பது அனைவரினதும் கனவாகும். இல்லம் அனைவருக்கும் இருக்க வேண்டியதாகும். ஆனால் இந்த கனவை நனவாக்கிக் கொள்ள முடியாமல், உடைமையை உரித்தாக்கிக் கொள்ள முடியாமல் ஆயிரக்கணக்கானோர் தவிக்கின்றனர். மூன்று தசாப்த காலங்களாக நிலவிய போரின் முடிவோடு வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் மக்களை மீள்குடியமர்த்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த பணிகளை நடைமுறைப்படுத்துவதற்காக இராணுவம் பெரும் பங்காற்றியது. தற்காலத்திலும் இலங்கை இராணுவம் தம் அடிப்படை பணிகளை மேற்கொள்கின்ற அதேவேளை சமூக மேம்பாட்டு பணிகள் மற்றும் அபிவிருத்தி பணிகளில் முக்கிய பணியை மேற்கொள்கின்றது.

யுத்தத்தின் முடிவின் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் வாழ்ந்து வரும் மக்களின் அபிவிருத்திக்காக பல வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்காக இராணுவம் அயராது முயற்சித்து வருகிறது.

நாட்டின் ஒழுக்கம், முறையான பயிற்சிகளின் மூலம் திறமை வாய்ந்த இலங்கை இராணுவத்தின் தொழிநுட்ப அறிவு மற்றும் மனித வள பங்களிப்பினூடாக மேலும் விசேடமானதொரு வேலைத்திட்டமொன்று யாழ் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பொருளாதார இன்னல்களினால் அன்றாட வாழ்வில் பெரும் கஷ்டங்களுக்கு முகங்கொடுக்கின்ற நிரந்தர வதிவிடமற்றோருக்கு நிரந்தர வதிவடம் அமைத்து கொடுப்பதே இந்த வேலைத்திட்டமாகும். வடக்கு மற்றும் தெற்கு பிரதேசங்களிடையே நல்லிணக்கத்தை மேம்மடுத்தும் நோக்கத்துடன் துவங்கப்பட்ட இந்த வேலைத்திட்டத்திற்கு அவசியமான நிதியுதவிகள் மற்றும் ஒத்துழைப்புகள் தென்னிலங்கையின் கொடையாளிகளாலும் பல்வேறு அறக்கட்டளைகள் மூலமாகவும் வழங்கப்படுகின்றன.

இந்த வீடமைப்பு திட்டம் 2009 வருடத்தில் இலங்கை இராணுவத்தால் ஆரம்பிக்கப்பட்டதோடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அக்காலகட்டங்களில் பணியாற்றிய இராணுவ தளபதிமார்கள் மற்றும் தற்போதைய இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே அவர்கள் உட்பட்ட இராணுவ அமைப்புக்களின் தளபதிகளின் பூரண ஒத்துழைப்பு இந்த திட்டத்திற்கு வழங்கப்படுவதானது குறிப்பீடத்தக்க விடயமாகும்.

யாழ் பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் கீழ் இயங்குகின்ற 51,52 மற்றும் 55 வது படைப்பிரிவு தலைமையகங்கள், முன்னரங்கு பராமரிப்பு பிரதேசம் – வடக்கு மற்றும் படை அலகுகளின் மூலம் இந்த வீடமைப்பு திட்டத்தின் மூலமும் பொறுப்புக்கூற கடமைப்பட்டுள்ள வேறு நிறுவனங்களால் விடுக்கப்படும் வேண்டுகோள்களின் மூலம் பயனடையும் குடும்பங்கள் இனங்காணப்பட்டு இந்த திட்டத்திற்கு அவசியமான தொழிநுட்ப மற்றும் மனித வள பங்களிப்பை இராணுவ உறுப்பினர்கள் வழங்கி வருகின்றனர்.

2009 வருடத்திலிருந்து இவ்வாறாக நடைமுறைப்படுத்தப்படும் இந்த திட்டத்தின் மூலம் பாதுகாப்பு படைத்தலைமையகம் யாழ்ப்பாணத்தில் மாத்திரம் இராணுவத்தால் இதுவரை 769 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறாக புதிய வீடுகள் அமைக்கப்பட்டதன் பின்னர் குறித்த வீட்டிற்கு அவசியமான இலத்திரனியல் உபகரணங்கள், மின்சார வசதிகள், நீர் வசதிகள் மற்றும் வீட்டு சூழலை அழகுபடுத்துவதற்கு அவசியமான மரக்கன்றுகளை நடுவது வரை இராணுவம் தம் பங்களிப்பை வழங்குகிறது. அது மாத்திரமின்றி யாழ் குடாநாட்டின் உட்கட்டமைப்பு வசதிகள், புனித தளங்களின் அபிவிருத்தி பணிகள் மற்றும் புனரமைப்பு பணிகள், பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகள், பாடசாலை மாணவர்களுக்கு அவசியமான கற்றல் உபகரணங்கள், தொற்றுநோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள், மர நடுகை வேலைத்திட்டங்கள், விவசாய வேலைத்திட்டங்கள், கால்நடை வளர்ப்பு தோடர்பான வேலைத்திட்டங்கள், கடற்கரை தூய்மை தொடர்பான வேலைத்திட்டங்கள், வைத்திய முகாம்கள் போன்ற இன்னோரன்ன பல வேலைத்திட்டங்கள் இலங்கை இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இனம், மதம், மற்றும் கலாசார வேறுபாடுகளை கருத்திற்கொள்ளாமல் அனைத்து பிரஜைகளையும் சமத்துவத்துடன் எதிர்கால அபிவிருத்தியை நோக்கி வழிநடத்துவதற்காக கடமையாற்றுவதே இலங்கை இராணுவத்தின் நோக்கமாகும். அதற்காக, 'அன்று மரணத்தின் நிலம்' என அழைக்கபட்டவை இன்று விளைச்சல் நிலங்களாக மாற்றுவதற்கு இராணுவம் அயராது உழைக்கின்றது. அன்று மரண ஓலங்கள் நிறைந்த பூமியில் இன்று மழலைச்சிரிப்பொலிகளே பரவுகின்றன. அன்று குண்டு, வெடிசத்தங்கள் நிறைந்த இந்த மண்ணில் இன்று கோயில், தேவாலய, விகாரை மணியோசைகளே கேட்கின்றன. சுற்றுச்சூழல் முழுவதும் சுதந்திரமாக பறந்து திரியும் புறாக்களின் சிறகோசையே பரவுகின்றது. இவை அழகான எதிர்காலத்திற்கான சகுனங்களாகும்.

ஆக்கம் –
லெப்டினன் திலங்க குணதிலக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு பாதுகாப்பு படைத் தலைமையகத்தினரால் போதைப்பொருள் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு பயிற்சி பட்டறை


கிழக்கு பாதுகாப்பு படைத் தலைமையகத்தினர், மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் போதைப்பொருள் மற்றும் அதன் பாவனையால் ஏற்படும் ஆபத்துக்கள் குறித்துத் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயத்தில் செப்டெம்பர் 12 ம் திகதி விழிப்புணர்வு பட்டறை நிகழ்வொன்று நடாத்தப்பட்டது.



காத்தான்குடி பள்ளிவாசல்கள், இஸ்லாமிய நிறுவனங்களின் கூட்டமைப்பு, மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம், கிழக்கு பாதுகாப்பு படைத் தலைமையக தளபதி மேஜர் ஜெனரல் எம்கேயுபி குணரத்ன என்போர்கள் மத தலைவர்களிடம் கலந்தாலோசித்து இந்தத் திட்டத்தை முன்னெடுத்தனர். பாடசாலையில் நடைபெற்ற விரிவுரை அமர்வில் அப்பிரதேசத்தைச் சேர்ந்த 600க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் கலந்துகொண்டனர். திட்டத்திற்கு மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தின் சிரேஸ்ட திட்ட அலுவலர் திரு. அப்துல் ரஹீம் மற்றும் ஓய்வுபெற்ற உணவு மற்றும் பான பாதுகாப்பு அதிகாரி திரு. அப்துல் தஸ்தீர் ஆகியோர் ஆதரவு அளித்தனர்.



காத்தான்குடி பள்ளிவாசல்கள் மற்றும் இஸ்லாமிய நிறுவனங்களின் சம்மேளனத்தின் தலைவர் திரு.ரவூப் மஜீத், சிவில் அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் இராணுவ அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளையாட்டு செய்திகள்






சமூகங்களுக்கிடையே நல்லிணக்கத்தை மேம்படுத்தும் குறிக்கோளுடன் ஜே/295, நாவற்குழி (கிழக்கு)கிராம சேவைப்பிரிவின் இளைஞர்கள் மற்றும் 11 வது இலங்கை பொறியியல் படையணியின் சிப்பாய்களுக்கிடையே நட்புறவு கிரிக்கெட் போட்டியொன்று 2023 ஆகஸ்ட் 06ம் திகதி இடம்பெற்றது. குறித்த போட்டியின் இறுதியில் நாவற்குழி கிராமசேவைப்பிரிவு இளைஞர்கள் வெற்றி பெற்றனர்.

## 55 வது காலாட் படைப்பிரிவினால் கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு காணி விடுவிப்பு






அரசாங்கத்தின் கொள்கைகளின் படி இராணுவத் தளபதியின் பணிப்புரையின் பேரில் யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையக தளபதி, படையினரின் செயல்பாட்டுத் தேவைகளுக்காக இதுவரை பயன்படுத்தப்பட்ட கிளிநொச்சி ஆனந்தபுரத்தின் 1 ஏக்கர் 3 ரூட்ஸ் மற்றும் 10.52 பேர்ச்சஸ் கொண்ட காணியை 14 செப்டெம்பர் 2023 திகதியன்று விடுவித்தார். குறித்த இடத்தில் இடம்பெற்ற நிகழ்வின் போது காணிக்கான உத்தியோகபூர்வ ஆவணங்கள் யாழ். பாதுகாப்பு படைத் தலைமையக தளபதியினால் கிளிநொச்சி மாவட்ட செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனிடம் கையளிக்கப்பட்டது. கிளிநொச்சி மத்திய கல்லூரி அதிகாரிகளால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்த காணி விடுவிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் மாவட்டச் செயலாளர், யாழ். பாதுகாப்பு படை தளபதி, பிரதி பொலிஸ் மா அதிபர், 55 வது காலாட் படைப்பிரிவின் தளபதி, 551, 552 மற்றும் 553 வது பிரிகேட் தளபதிகள், பிரதேச சிரேஸ்ட அதிகாரிகள், அதிகாரிகள், சிப்பாய்கள், கரைச்சி பிரதேச சபையின் செயலாளர், அதிபர், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அழகிய வண்ணத்துப்பூச்சி

எனது அப்பா அம்மாவை பற்றி எனக்கு தெரியாது. ஆனால் எனது குழந்தை பருவம் எனக்கு இன்னும் ஞாபகம் இருக்கிறது. சில நாட்களுக்கு முன் நான் ஒரு கொன்றை மரத்திலுள்ள பிஞ்சு இலை ஒன்றை கடித்து சாப்பிட்டு கொண்டிருந்தேன். அப்போது நான் சிறியதொரு கம்பளிபூச்சியாக இருந்தேன். அப்போது நான் சாப்பிட்டுக்கொண்டிருந்த சாப்பாட்டின் மீதான விருப்பம் எனக்கு கொஞ்சம் கொஞ்சமாக இல்லாமல் போய்விட்டது. எனது உடம்பு வலிக்க ஆரம்பித்தது. இன்னும் கொஞ்ச நேரத்தில் எனது வாயிலிருந்து ஏதோ ஒருவகையான திரவம் ஒன்று வெளியே ஊற்றியது. அப்போது.. நான் அந்த திரவத்தினை எனது உடம்பு முழுவதும் பூசிக்கொண்டேன். அதன் காரணமாக ஒரு கூடு போன்றதொரு சிறியவலையினால் எனது முழு உடலும் மறைந்துவிட்டது. அதன் பின் நான் தூ – ங்கிவிட்டேன். நான் வெகுநேரமாக நன்றாக தூங்கினேன், என்றே நினைக்கிறேன். அந்நேரத்திற்குள் எனது உடல் முழுமையாக மாற்றமடைந்துவிட்டது போலும்.

அந்த கம்பளி புழுவினது உடல் முழுவதுமாக மறைந்து அதற்கு மாறாக மிகவும் அழகிய செந்நிற கோடுகள் விழுந்த மஞ்சள் நிற இறக்கைகள் இருந்தன... என்னால் மேலும் அந்த கூட்டுக்குள் இருக்க முடியவில்லை. மிகுந்த முயற்சி செய்து ஒருவாராக அந்த கூட்டிலிருந்து வெளியிலே வந்து விட்டேன். ஆஹா... என்ன அருமை நான் லாவகமாக எனது இறக்கைகளை அசைக்கும் போதே மேலே மிதந்து சென்றேன். ஹா... ஹா.. ! இப்போது என்னாலும் பறக்க முடியும். முன்பு போல் என்னால் இலைகளை உண்ண முடியாது. இப்போது என் வாயினுள் சிறியதொரு குழாய் ஒன்று இருக்கிறது. அதனால் மலர்களின் தேனை உறிஞ்சலாம். ஆகையால் மலர்களது தேனை தேடியவாறு நான் பல மலர்களை தேடிச்சென்றேன். ஆனால், ஒரு பூவிலேனும் தேனிருக்கவில்லை.

அப்போது அழகிய மலர்கள் பூத்து குலுங்கும் ஒரு பூந்தோட்டம் இருக்கும் ஒரு வீட்டினை கண்டேன். நான் எனது அழகிய இறக்கைகளை அசைத்த வண்ணம் ஆனந்தத்துடன் அத்திசையை நோக்கி பறந்து சென்றேன். "அங்கே பார் அழகானதொரு வண்ணத்துப்பூச்சி... வாசீக்கிரம் பிடிப்போம்...! என சிறுவர்கள் என்னை சூழ்ந்துகொண்டனர். ஐயோ நான் மிகவும் பயந்துவிட்டேன். பயம் மேலிட்டு என்னை அறியாமலேயே பெரும் சத்தமிட்டேன். வேகமாக இறக்கைகளை அடித்து கொள்ள முடியாமல் தடுமாறினேன். இருப்பினும் மிகவும்வீரியம் கொண்டு மேல் நோக்கி பறந்தேன். அருகில் இருந்த ஒரு மரத்தின் இலையின் பின்னால் மறைந்து கொண்டேன்.

அப்போது என்னை போன்றே இன்னுமொரு வண்ணத்துப்பூச்சி அலரும் சப்தம் கேட்டது. "ஐயகோ...! ஆஹ்... மிகவும் வலிக்கிறது. என்னை விட்டுவிடுங்கள். என அந்த வண்ணத்துபூச்சி கதறிக்கொண்டிருந்தது. ஒரு சிறுவன் மிகவும் அழகியதொரு வண்ணத்துப்பூச்சியின் இறக்கைகளை இரு விரல்களால் இறுக பற்றியபடி இருந்தான். அந்த வண்ணத்துப்பூச்சியின் வேதனை தொடர்பாக எவ்வித கவலையும் அவனிடம் இருக்கவில்லை. நான் சீக்கிரமாகவே அவ்விடத்தினை விட்டு அகன்றுவிட்டேன். காடு போன்று காட்சியளித்த சிறிய புதர்கள் நிறைந்த ஒரு திறந்த வெளியை

நோக்கி நான் பறந்து வந்தேன். இன்னுமொரு வண்ணத்துப்பூச்சியின் அலறல் சப்தம் ஒன்றும் கேட்டது. என்னையறியாமலே நான் அலறல் சப்தம் வந்த திசையை பார்த்தேன். சிறியதொரு முதலையை போன்ற கொடிய தோற்றமுடைய பயங்கரமானதொரு ஓணான் அந்த வண்ணத்துப்பூசியை வாயினால் இறுக பற்றியபடி மென்று விழுங்கியது. நான் மிகவும் அச்சம் கொண்டேன். அங்கிருந்தும் சீக்கிரமாகவே அகன்று விட்டேன். அதோ என்னை விடவும் மிகவும் அழகானதொரு வண்ணத்துப்பூச்சி ஒன்று பறந்து வருகிறது. அதனிடமாவது தேனிருக்கும் மலர்கள்

எங்குள்ளது என்று கேட்க வேண்டும். ஐயோ..! ஈட்டியை போல் வேகமாக பறந்து வந்த ஒரு பறவை அந்த வண்ணத்துப்பூச்சியை விழுங்கிவிட்டதே! நான் அதிர்ச்சியால் பெரும் சப்தமிட்டேன். ஐயோ...! நான் என்ன செய்வேன்...? எனக்கு மிகவும் பயமாக உள்ளது. பசி வயிற்றை கிள்ளுகிறதே... தேனிருக்கும் மலர்களுமில்லையே...! என்ன செய்வேன்?

நான் இன்னும் வெகு தூரம் பறந்து சென்றேன். ஆ... இன்னுமொரு வண்ணத்துப்பூச்சி இப்பக்கமாக பறந்து வருகிறதே. அவதனிடமாவது கேட்க வேண்டும். "தோழரே! தேனிருக்கும் மலர்கள் இருக்கும் ஒரு இடத்தினை காணவில்லையா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆ...! உங்களுக்கு இன்னும் மலர் தேன் கிடைக்கவில்லையா? சரி...! இன்னும் கொஞ்ச தூரம் அத்திசையை நோக்கி பறந்து செல்லுங்கள்.

இரயில் வீதியின் அருகே தேனிருக்கும் மலர்கள் மலர்ந்துள்ளன. நானும் அங்கு தான் தேனை அருந்தினேன். இன்னும் அந்த மலர்களில் தேனுள்ளது. ஆனால் வானத்தினை பாருங்கள். இருண்டுவிட்டது. இன்னும் சற்று நேரத்தில் மழை பெய்யப்போகிறது... அதற்கு முன்னர் முடியுமென்றால் சென்று பசியாறுங்கள். நானும் சிக்கிரமாகவே அவ்விடத்தை அடைய வேண்டும் என பறந்து சென்றேன். தேன் நிறைந்திருக்கும் மலர்களை கண்ணால் காணக்கிடைத்தும் பருக முடியவில்லை. ஐயகோ! பாருங்கள்,... மழை வந்துவிட்டது... ஐயோ! எனது இறக்கைகள் நனைகின்றனவே... என்னால் பறக்க முடியவில்லையே... அந்த மரத்திற்காகவாவது செல்ல வேண்டும். எனக்கு மிகவும் பசிக்கிறது. ஆனாலும் என்னால் இனியும் பறப்பதற்கு மிகவும் கடினமாக இருக்கிறதே. என்னால் பறக்கவும் முடியவில்லை. நான் மழையிலே நன்றாக நனைந்துவிட்டேன்.இன்னும் சற்று நேரத்திலேயே நான் இறந்துவிடுவேன். நான் முற்பிறவிகளில் ஏதேனும் கொடிய பாவங்களை செய்திருக்க வேண்டும். அதனால்தான் வண்ணத்துப்பூச்சியாக பிறந்து இவ்வளவு துன்பத்தினை அனுபவிக்க நேரிட்டது. என்னை போல் தாகத்தினாலும், பட்டினியாலும் எத்தனை வண்ணத்துப்பூச்சிகள் இறக்கின்றனவோ...? குழந்தைகளே...! என்னை போன்ற வண்ணத்துப்பூச்சிகளை பிடிக்க வேண்டாம்.

எமது இறக்கைகள் மிக மிக மென்மையானவை. சீக்கிரமாகவே உடைந்துவிடும். அப்போது நாம் மிகுந்த வேதனையால்துடித்து போகிறோம். எம்மீது கருணை காட்டுங்கள். குறைந்தபட்சம் இந்த துரதிஷ்டம் மிக்க வண்ணத்துப்பூச்சி வாழ்க்கை முடிவுறுவதற்கு முன்னர் வயிறு நிறைய தேனை உட்கொள்ளுவதற்காவது தேனிருக்கும் மலர்செடிகளை நடுங்கள். ஐயோ! அங்கே பாருங்கள். சிவப்பு நிற கொம்புகள் இருக்கும் கூரிய பற்கள் இருக்கும் கொடிய வகையான எறும்புகள் என்னை நோக்கி ஓடோடி வந்து கொண்டிருக்கின்றன. ஐயோ...! என்னால் பறக்கவும்

முடியவில்லையே... ஐயோ... வேண்டாம் என்னை விட்டுவிடுங்கள்.... ஆ... ஆ...

**அழகிய இறகுகள் இருந்தாலும் அதில் வண்ணங்கள் நிறைந்திருந்தாலும்**

**பருகுவதற்கு தேனில்லையெனில் – எந்நாளும் பசியினது கொடுமையே**

**பறந்து பறந்து செல்லும் நான் சிறிது காலம் வாழும் நான் எங்கு செல்வேன் என அறியாது – மரணத்தினையே நெருங்குகிறேன்.**

**என்மீது கருணை கொண்டு அழகில்லாவிடிலும் தேனிருக்கும் மலர்களையே நட்டு வைப்பீர் சிறுவர்களே...!!**

**தொகுப்பு :ஷஷ்வின் செனோல்**
**தரம் 05**
**மொணராகலை**

# சமாதானம்

**வெள்ளை புறாக்களே நில்லுங்கள்.**
**எங்கள் சொல்லைக் கேட்டு நீங்கள்**
**செல்லுங்கள்...**
**எல்லைப் புறந்தாண்டி செல்லுங்கள்.**

**எங்கள் ஏக்கத்தை புரிந்து கொள்ளுங்கள்.**

**மேகங்கள் மோதிட மழைதானே...**
**தேகங்கள் மோதிடல் பிழைதானே..**
**அமைதி தீவடி பாப்பா!**
**இங்கு அன்புக்கு ஏதடி கேள்வி?**
**போரது நித்தம் போதுமென்று நம் லங்கா**
**தாயவள் வேட்பாள்...**
**அன்பே எமது பேராயுதம் ...**
**இங்கு ஆராவராத்திற்கு இடமேது?**

**போரில் ஒருவருக்கே வெற்றி**

**சமாதானத்தில் இருவருக்கே வெற்றி**
**மனம் என்ற வீட்டில் மனிதநேயம் என்ற**
**கதவை தட்டித் திறந்து மனங்களுக்கு**
**அன்பையும் அமைதியையும்**
**சமாதானத்தையும்**
**மரணம் வரை பகிர கூறுவீர்**
**வெண்புறாக்களே...!**

**-ஹெனுஜா - தரம் 11**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீயே எம் பாதுகாவலன்...

உன் பாதுகாப்பை இழந்தாலும் நித்தம்
எம் பாதுகாப்பையே நீ கருதினாய்...
மண்ணினுள் புதைந்த மக்களை மனதினில் நினைத்து
அவர்களை நீ கரங்களில் ஏந்தினாய்...
எம் உயிரை பாதுகாக்க உன் உயிரை
பணையம் வைத்தாய்...
உன் கண்ணை மண்ணாகவும்,
தாய் மண்ணை கண்ணாகவும் கருதினாய் நீ...!
உன் உறவைப் போல நாட்டு மக்களையும்
உன் உயிரைப்போல்-நாட்டையும் நேசித்து பாதுகாத்தாய்
மக்களின் மனதில் நிறைந்த எம் மண்ணின் மைந்தர்களே...!
நானும் உம்மைப் போல் வளர்ந்து
ஓர்நாள் உனக்கும் எந்நாட்டுக்கும் பாதுகாப்பளிப்பேன்.

ஹு. திவ்யா
தரம் 10 கணபதி த.ம.வி - நோர்டன் பிரிட்ஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org